நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**CC. No.499/2024**

**D.W.3 –ன் வாக்குமூலம்**

**(எதிரிதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | பிரவீன்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | சம்பத்குமார் |
| கிராமம் | : | அஸ்தம்பட்டி |
| வட்டம் | : | சேலம் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **DW3** |
| வயது | : | 39 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம், மார்ச் மாதம், 13–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**புகார்தாரர்கள் ஆஜர். அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 04.01 P.M.

1. நான் தற்போது சேலம் ஹஸ்தம்பட்டியில் குடியிருந்து freelancing முறையில் மென்பொருள் testing வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கின் எதிரி கார்த்திகேயன் என்பவரும் நானும் MBA ஒன்றாக படித்தோம். எதற்காக கார்த்திகேயன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியவில்லை.

கார்த்திகேயன் அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த வழக்கு புகார்தாரர் எனக்கு தெரியாது.

2. சுமார் 2 ½ வருடத்திற்கு முன்பு ஒருநாள் குரங்குசாவடியில் உள்ள எதிரி கார்த்திகேயனின் அலுவலகத்திற்கு அவரை பார்ப்பதற்காக நான் சென்றிருந்தேன். அப்போது காலை 10 மணியிலிருந்து 12 மணிக்குள் இருக்கும். ஆஜரில் இருக்கும் நபர் (ஆஜரில் இருக்கும் மூன்றாவது புகார்தாரரை சுட்டிக்காட்டுகிறார்) அங்கு இருந்தார். அவரிடம்தான் ரூபாய் தொன்னூறு லட்சம் பணம் கடன் கேட்டிருந்ததாக கார்த்திகேயன் என்னிடம் சொன்னார். ஆஜரில் இருக்கும் நபர் பெயர் எனக்கு தெரியாது.

3. அப்போது பணம் கொடுத்ததாக எனக்கு தெரியவில்லை. ஆனால் ஒரு முத்திரை தாள் மற்றும் அதனுடன் இணைந்த சில ஆவணங்களிலும் எனது நண்பர் கார்த்திகேயன் கையெழுத்து செய்தார். ஆஜர் நபருடன் வந்த மற்றொரு நபர் நான் எங்கெங்கு சாட்சி கையெழுத்து போட்டேனோ அவரும் அங்கு சாட்சி கையெழுத்து போட்டார். அது என்னென்ன ஆவணங்கள் என்று எனக்கு தெரியாது. அந்த ஆவணங்களை நான் படித்து பார்க்கவில்லை. அதன் பின்னிட்டு அவரவர் கிளம்பி சென்றுவிட்டோம்.

4. என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.14 விற்பனை ஒப்பந்த பத்திரத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

**(கற்றந்த எதிரி தரப்பு வழக்கறிஞரால் கேள்வி கேட்கப்பட்டு கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டது)**

5. **கேள்வி:–** மேற்படி நிகழ்வில் கார்த்திகேயன் ஏதாவது ஆவணங்களை வந்திருந்த நபரிடம் ஒப்படைத்தாரா ?

6. **பதில்:–** ஒரு காசோலை ஒப்படைத்தார். (ஒரு காசோலைதான் ஒப்படைத்தார என்று கேள்வியை தெளிவுபடுத்தி சாட்சியிடம் கேட்ட போது சாட்சி இரண்டு காசோலைகள் கொடுத்ததாக சொல்கிறார்.)

**புகார்தாரப்பில் குறுக்கு விசாரணை :–**

7. என்ன தேதியில் மேற்படி நிகழ்வு நடைபெற்றது என்னால் சரியாக சொல்ல முடியாது. நான் முதுநிலை பட்டதாரி என்றால் சரிதான். எனக்கு தமிழ், ஆங்கிலம் நான்றாக எழுத படிக்க தெரியும் என்றால் சரிதான். பொதுவாக நான் படித்து பார்த்துதான் கையெழுத்து செய்வது வழக்கம், தெரிந்தவர்கள் என்பதால் நான் ஆவணங்களை படித்து பார்க்காமல் கையெழுத்து செய்தேன்.

8. கார்த்திகேயன் கொடுத்த காசோலையை தவறாக பயன்படுத்தியதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தாரா என்றால் எனக்கு தெரிந்தவரையில் இல்லை. புகார்தாரருக்கும், எதிரிக்கும் உள்ள பழக்க வழக்கம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது. புகார்தாரருக்கும், எதிரிக்கும் உள்ள பணபரிவர்த்தனை குறித்து என்ன பேசி உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த புகார்தாரருக்கும் எதிரிக்கும் இடையேயான ஆன்லைன் பணபரிவர்த்தனை பற்றி எனக்கு தெரியாது. எதிரி என் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார்தாரருக்கு காசோலை தொகையை கொடுக்க எதிரி சட்டப்படியாக கடமைப்பட்டவர் என்றாலும் அதிலிருந்து அவரை தப்புவிக்கவேண்டி எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:– 4.25

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்**

**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**